## SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN COMMERCE (EXTERNAL) – 2006 / 2007

### Held in May 2007

## COM 33 – ACCOUNTING THEORY AND STANDARDS

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

01. 01 ஒக்டோபர் 2001 இல் மூன் நிறுவனமானது சன் நிறுவனத்தின் வழங்கிய சாதாரன பங்கு மூலதனத்தில் 80 % வற்றை கொள்வனவு செய்தது. மூலதனக் கிரயம் G 400,000 வாகவும், கொள்வனவுத் திகதியில் சன் நிறுவனத்தின் திரட்டிய இலாபம் G 43,000 மாகும். G என்பது குரோட் நாணய அலகாகும்.

அவசியமான நாணய மாற்று வீதங்கள் பின்வருமாறு

| திகதி | செலாவணி வீதம் (1 குரோட்டுக்கு ஒரு டொலர்) |
|---|---|
| 01 ஒக்டோபர் 2001 | 4.00 |
| 30 செம்ரம்பர் 2005 | 3.90 |
| 30 செம்ரம்பர் 2006 | 3.75 |
| 30 செம்ரம்பர் முடிவடைந்த ஆண்டுக்கான சராசரி | 3.80 |

30 செப்ரம்பர் 2006 இல் உள்ளபடியான மூன் நிறுவனத்தினதும் அதனது உப கம்பனி சன் நிறுவனத்தினதும் ஐந்தொகைகளும், 30 செப்ரம்பர் 2006 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்றும், உரிமை மாற்றல் கூற்றுக்களும் பின்வருமாறு

**30 செப்ரம்பர் 2006 இல் ஐந்தொகை**

| | மூன் | | சன் | |
|---|---|---|---|---|
| | $000 | $000 | G000 | G000 |
| ஆதனம், பொருத்து, உபகரணம் | | 257.5 | | 460 |
| சன் நிறுவனத்தில் முதலீடு | | 100 | | - |
| | | 357.5 | | 460 |
| தேறிய நடைமுறைச் சொத்து | | 594.5 | | 450.5 |
| | | 952 | | 910.5 |
| பங்கு மூலதனம் | | 452.5 | | 425 |
| திரட்டிய இலாபம் | | 371 | | 433 |
| | | 823.5 | | 858 |
| கடன்கள் | | 128.5 | | 525 |
| | | 952 | | 910.5 |

**30 செப்ரம்பர் 2006 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| | மூன் | சன் |
|---|---|---|
| | $ 000 | G 000 |
| வருமானம் | 5145 | 5325 |
| விற்ற சரக்கின் கிரயம் | (2572.5) | 2662.5 |
| மொத்த இலாபம் | 2572.5 | 2662.5 |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | (2058) | (2130) |
| செயற்பாட்டு இலாபம் | 514.5 | 532.5 |
| சன் பங்குகளிற்கான வருமானம் | 32 | - |
| வரிக்கு முன்னரான இலாபம் | 546.5 | 532.5 |
| வருமான வரி செலவு | (174) | (192.5) |
| வருடத்திற்கான இலாபம் | 372.5 | 340 |

30 செப்ரம்பர் 2006 இல் முடிவுற்ற ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று

| | மூன் | சன் |
|---|---|---|
| | $ 000 | G 000 |
| 01 ஒக்டோபர் 2005 இல் மீதி | 257.5 | 460 |
| வருடத்திற்கான இலாபம் | 372.5 | 340 |
| பங்கிலாபம் | (175) | (150) |
| 30 செப்ரம்பர் 2006 இல் மீதி | 823.5 | 858 |

நீங்கள் வேண்டப்படுவது

(அ) சன் நிறுவனத்தினுடைய ஐந்தொகையை டொலரிற்கு மாற்றி 30 செப்ரம்பர் 2006 இல் உள்ளபடியான மூன் குழுவினுடைய திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்குக. (13 புள்ளிகள்)

(ஆ) சன் நிறுவனத்தினுடைய வருமானக் கூற்றினை டொலரிற்கு மாற்றி 30 செப்ரம்பர் 2006 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மூன் குழுவினுடைய திரட்டிய வருமானக் கூற்றினைத் தயாரிக்குக. (5 புள்ளிகள்)

(இ) 30 செப்ரம்பர் 2006 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மூன் குழுவினுடைய உரிமை மாற்றல் கூற்றினை தயாரிக்குக.

இக்கூற்றிலுள்ள எல்லாப் பெறுமதிகளும் அவசியமான செயற்பாடுகளுடன் காட்டப்பட வேண்டும். (12 புள்ளிகள்)
(கிட்டிய $ பெறுமதியில் செய்க.)

(மொத்தம் 30 புள்ளிகள்)

02. (அ) கணக்கியல் தகவல்களானவை முகாமையாளர்களுக்கு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமாகும். கணக்கியல் தகவல்களின் உதவியுடன் மேற்கொள்ளக்கூடிய ஐந்து வியாபாரத் தீர்மானங்களின் உதாரணங்களைத் தருக. (5 புள்ளிகள்)

(ஆ) தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவக்கூடிய கணக்கியல் தகவல்கள் கொண்டிருக்க வேண்டிய தர ரீதியான பண்புகளை விளக்குக. (6 புள்ளிகள்)

(இ) (i) M சேனாரத்னம் ஒரு மருத்துவ உத்தியோகத்தர். மொத்த சொத்து ரூபா 320,000, உரிமையாளர் உரிமை ரூபா 80,000 ஆகும். அவருடைய பொறுப்புக்களின் பெறுமானம் என்ன?

(ii) S சிரசேன ஒரு முகாமை ஆலோசகர், உரிமையாளர் உரிமை ரூபா 170,000 ஐந்தொகையில் காணப்படுவதோடு, இது மொத்த சொத்தில் மூன்றில் ஒரு பங்காகும். பொறுப்புக்களின் பெறுமானம் என்ன?

(iii) கடந்த வருட காலப்பகுதியில், ரவியினுடைய கணனி திருத்தும் நிறுவனத்தினுடைய உரிமையாளர் உரிமை ரூபா 50,000 இல் இருந்து 65,000 ரூபாவாக உயர்ந்துள்ளது. இருந்தபோதிலும், உரிமையாளர் அவரது சொந்த பாவனைக்காக ரூபா 20,000 தை பற்றியுள்ளார். மேலதிக முதலீடு ரூபா 5000 ஆக இருந்தால் கடந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் என்ன?

(iv) முதலாவது வருடம் டிசம்பர் 31 இல் N பந்துலவின் சொத்து ரூபா 150,000 ஆகும். ஆனால் இது இரண்டாம் வருடம் டிசம்பர் 31 இல் 210,000/- வாக அதிகரித்துள்ளது. இதே காலப்பகுதியில் பொறுப்பானது 50,000/- வால் அதிகரித்துள்ளது. முதலாம் வருடம் டிசம்பரில் உரிமையாளர் உரிமை ரூபா 100,000/- ஆகும். இரண்டாம் வருடம் டிசம்பரில் உரிமையாளர் உரிமை எவ்வளவு? உமது விடைக்கான அடிப்படையினை விளக்குக. (7 புள்ளிகள்)

(ஈ) மூன்று கொடுக்கல் வாங்கல்களால் ஒரு பயின்றுவரும் வழக்கறிஞர் டயஸினுடைய ஆரம்ப ஐந்தொகை வாய்ப்பாட்டு வடிவத்தில் பின்வருமாறு தரப்படுகின்றது. இவ்வாய்ப்பாட்டில் மூன்று கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்கள் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு விடயத்திற்குமான கொடுக்கல் வாங்கல்களை விளக்குக.

| | காரியாலய வழங்கல்கள் | + | முற்பணமாக செலுத்திய வாடகை | + | கடன்பட்டோர் | + | காசு | = | மூலதனம் | + | கடன்கொடுனர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீதி | 2,000 | + | 18,000 | + | 45,000 | + | 35,000 | = | 98,500 | + | 1,500 |
| (1) | | | | | − 12,500 | | + 12,500 | | | | |
| (2) | + 1,000 | | | | | | | | | | + 1,000 |
| (3) | | | | | + 24,000 | | | | + 24,000 | | |

(20 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (அ) வருடாவருடம் ஒரு வியாபார நிறுவனம் அதனது இருப்பு கிரயலிடல் முறையினை மாற்றலாமா? விளக்குக.

(5 புள்ளிகள்)

(ஆ) தேறிய தேறக்கூடிய பெறுமதியினை (Net Realizable Value) வரையறை செய்க.

(2 புள்ளிகள்)

(இ) கண்டி சுப்பர் ஸ்ரோஸ் ஆனது வருட காலப்பகுதியில் தையல் இயந்திரப் பிரிவில் அதனுடைய அமைப்புக்களில் ஒன்றை பயன்படுத்தியது. கீழே வருவன 31 மார்ச் 2001 நடைமுறை நிதியாண்டு இறுதியில் தொடர்பான தகவல்களாகும்.

| | | |
|---|---|---|
| சாதாரண விற்பனை விலை | ரூபா | 18,000 |
| உண்மைக் கிரயம் | | 12,600 |
| சாதாரண நிலையில் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலை | | 13,100 |
| நிர்ணயிக்கப்பட்ட விற்பனை மாற்றல் கிரயம் | | 850 |

**வேண்டப்படுவது:**

மேலே தரப்பட்ட தகவல்களிலிருந்து 31 மார்ச் 2001 இல் ஐந்தொகையில் காட்டப்பட வேண்டிய தேறிய தேறக்கூடிய பெறுமதியைக் கணிப்பிடுக.

31 மார்ச் 2001 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பதியப்பட்ட இலாபத்தில் இத்தொகை ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துமா? விளக்குக.

(8 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

04. (அ) கீழ்வரும் ஒவ்வொரு விடயமும் காசுப் பாய்ச்சல் கூற்றினுடைய முன் நடவடிக்கையில் எதனுள் காணப்படும் என அடையாளம் காண்க. மேலும் அவ்விடயங்கள் காசு உட்பாய்ச்சலினையா / வெளிப்பாய்ச்சலினையா உருவாக்கும் எனக் குறிப்பிடுக.

(i) காசுக்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம்
(ii) கடன் அறவீட்டு மூலம் பெற்ற காசு
(iii) காசு மூலம் பெற்ற பங்கிலாபம்
(iv) காசு மூலம் பங்கிலாபம் செலுத்தப்பட்டது
(v) பங்கு வழங்கல் மூலம் பெறப்பட்ட காசு

(5 புள்ளிகள்)

(ஆ) கீழ்வரும் தகவல்கள் 31 மார்ச் 2003 இல் முடிவுற்ற ஆண்டுக்கான றபீக் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

(i) ரூபா 300,000 பெறுமதியுடைய பயன்படுத்திய உபகரணங்களின் சில பகுதிகள் ரூபா 428,000 விற்கு விற்பனை செய்யப்பட்டது.
(ii) ரூபா 880,000 இற்கு எதிர்கால விஸ்தரிப்பிற்காக காசு கொடுத்து காணி வாங்கப்பட்டது.
(iii) ரூபா 720,000 ற்கு காசுக்கு சாதாரண பங்குகள் வழங்கப்பட்டன.
(iv) ரூபா 200,000 காசு கொடுத்தும், ரூபா 320,000 ற்கு அடமானம் ஒன்று கைச்சாத்திட்டும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.
(v) நீண்டகாலக் கடன் 360,000 ரூபாவும் வட்டி 38,000 வும் செலுத்தப்பட்டது.
(vi) ரூபா 680,000 காசு செலுத்தி நந்தா நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்து முதலீடு மேற்கொள்ளப்பட்டது.

(vii) அபரணா நிறுவனத்தில் 368,000 பெறுமதியான பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு முதலீடு மேற்கொள்ளப்பட்டது.

(viii) ரூபா 200,000 இற்கு 10% தொகுதிக்கடன் வழங்கப்பட்டது.

(ix) ரூபா 200,000 புத்தகப் பெறுமதியுடைய அரசாங்க பிணைப்பத்திரம் 240,000 விற்கு விற்பனை செய்யப்பட்டது.

(x) 260,000 விற்கு காசு மூலம் பங்கிலாபம் செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது:

(அ) காசுப் பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கை பகுதியினைத் தயாரிக்குக.
(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றின் நிதியீட்ட நடவடிக்கை பகுதியினைத் தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

05. வரலாற்று ரீதியாகத் தயாரிக்கப்பட்ட 31.12.2000 இல் உள்ளபடியான ஐந்தொகையும், 31.12.2001 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கும் கீழே தரப்பட்டுள்ளன.

**31 டிசம்பர் 2000 இல் ஐந்தொகை**

| சொத்துக்கள் | ரூபா |
|---|---|
| இயந்திரம் | 60,000 |
| இருப்பு | 9,600 |
| கடன்பட்டோர் | 4,800 |
| காசு | 4,000 |
| | 78,400 |

| மூலதனமும் பொறுப்புக்களும் | |
|---|---|
| பங்கு மூலதனம் | 40,000 |
| 10 % தொகுதிக்கடன் | 24,000 |
| நடைமுறைப் பொறுப்பு | 14,400 |
| | 78,400 |

**31 டிசம்பர் 2001 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு**

| | | |
|---|---|---|
| விற்பனை | | 40,000 |
| விற்ற சரக்கின் கிரயம் | 9,600 | |
| கொள்வனவு | 18,400 | |
| இறுதி இருப்பு | (8,000) | 20,000 |
| மொத்த இலாபம் | | 20,000 |
| கழி: | | |
| தேய்வு | 6,000 | |
| செயற்பாட்டுச் செலவு | 3,200 | |
| தொகுதிக் கடன் வட்டி | 2,400 | (11,600) |
| தேறிய இலாபம் | | 4,400 |

மேலதிக தகவல்கள்

1. வருட காலப்பகுதியில் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் தொகையில் மாற்றமில்லை.
2. கீழ்வரும் சுட்டிகள் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01 ஜனவரி 2001 | 200 |
| வருடத்துக்கான சராசரி | 240 |
| 31 டிசம்பர் 2001 | 300 |

3. இருப்பு கணிப்பீட்டிற்கு முதல் வந்து முதல் போகும் முறை பின்பற்றப்பட்டது.

நடைமுறைக் கொள்வனவு சக்தி முறை மூலம் விலை மட்ட மாற்றங்களை செய்தபின்னர் 2001 ம் ஆண்டிற்கான ஐந்தொகையினையும் இலாபநட்டக் கணக்கையும் தயாரிக்க.

(20 புள்ளிகள்)

***